IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1230/2025 Date : 01.06.2026 P.W. 4/ LW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமணன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | முனியன் | தொழில் | பெட்ரோல் பங்க் வேலை |
| கிராமம் | பாலி | வயது | 31 |
| 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பாலியில் வசித்து பெட்ரோல் பங்க் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது. சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். அந்த **பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும்.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 04.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு உளுந்தூர்பேட்டை காவல்நிலையத்தார் காவல்நிலைய குற்ற எண்.206/2025 வழக்கு சம்மந்தமாக சம்பவஇடத்திற்கு வந்து சம்பவஇடத்தை பார்வையிட்டு படம் வரைந்த போது நானும், அய்யப்பன் என்பவரும் பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.06.01 02:42:39 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1230/2025 Date : 01.06.2026 P.W. 3/ LW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யப்பன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | சிவகுமார் | தொழில் | நகைகடையில் வேலை |
| கிராமம் | ஒலையனூர் | வயது | 25 |
| 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஒலையனூரில் வசித்து நகைகடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் லட்சுமணன் என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 4–1/2 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். அந்த **பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2ஆகும்.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 04.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு உளுந்தூர்பேட்டை காவல்நிலையத்தார் காவல்நிலைய குற்ற எண்.206/2025 வழக்கு சம்மந்தமாக சம்பவஇடத்திற்கு வந்து சம்பவஇடத்தை பார்வையிட்டு படம் வரைந்த போது நானும், லட்சுமணன் என்பவரும் பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.06.01 02:42:52 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1230/2025 Date : 01.06.2026 P.W. 2/ LW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரத்ராஜ் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | பாபுராஜ் | தொழில் | பெட்ரோல் பங்க் உரிமையாளர் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 26 |
| 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக இரவு நேரத்தில் அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் அடிதடி தகராறு நடந்தது. பணம் சம்மந்தமாக இருவருக்கும் சண்டை நடந்தது. யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது அ.சா.1 எழில்பாபு பெட்ரோல் பங்கில் வேலை செய்து வந்தார் என்றும், 03.04.2025 ந் தேதி நானும் ஹரிகரன் என்பவரும் இரவு நேர பணியில் இருந்தோம் என்றும், அதிகாலை 04.04.2025 அன்று 2.50 மணிக்கு அ.சா.1 ம் ஹரிகரனும் தூங்கி கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்த பெட்ரோல் போடுமாறு அ.சா.1 னை அழைத்தார்கள் என்றும், அவர்கள் 200க்கு பெட்ரோல் போட்டுவிட்டு செல்போன் மூலம் அனுப்புவதாக சொன்னார்கள் என்றும், அரைமணிநேரம் ஆகியும் பணம் அனுப்பாமல் இருந்தார்கள் என்றும், அவர்கள் கையில் பணம் இல்லை என்று சொன்னார்கள் என்றும், அதற்கு அ.சா.1 உங்கள் செல்போனை கொடுத்து விட்டு போங்கள் பணம் கொடுத்துவிட்டு அதை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னேன் என்றும், அதற்கு எதிரிகள் மூவரும் செல்போனையா கேட்கிறாய் என சொல்லி தேவிடியா பையா என சொல்லி கையால் அ.சா.1 கண்ணத்திலும், முதுகிலும் அடித்தார்கள் என்றும், பின்னர் மூவரும் கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 முதுகு, உடம்பில் அடித்தார்கள் என்றும், வலி தாங்க முடியாமல் அ.சா.1 கத்தவே ஹரிகரன்

வந்து சண்டையை மறித்துவிட்டார் என்றும் பின்னர் அவர்கள் கொன்றுவிடுவதாக அ.சா.1 யை பார்த்து மிரட்டினார்கள் என்ற சங்கதியை போலிசார் விசாரணையிலும் சொல்லி விட்டு தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.06.01 02:43:04 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1230/2025 Date : 01.06.2026 P.W. 1/ LW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | உத்திரகுமார் | தொழில் | பெட்ரோல் பங்க் வேலை |
| கிராமம் | பாலி | வயது | 32 |
| 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பாலி கிராமத்தில் வசித்து பெட்ரோல் பங்க் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 04.04.2025 அன்று இரவு நான் பெட்ரோல் பங்கில் சேல்ஸ் மேனாக இருந்தேன். பெட்ரோலை நான் சிவபாலன் பைக்கிற்கு போட்டுவிட்டு, தொகை கேட்டேன். போனில் ஸ்கேன் ஆகவில்லை . அதனால் நான் தொகை கேட்டு மற்றும் செல்போன் கேட்டேன். நான் அவரிடம் செல்போனை கொடுங்கள் பின்னர் தொகையை கொடுங்கள் என சொன்னேன். அதனால் சிறு பிரச்சனை ஏற்பட்டது. கோபத்தில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். தற்சமயம் நான் சமாதானம் ஆகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆகும் . அதில் உள்ள என்ன வாசகம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது நான் எழில்பாபு பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன் என்றும், 03.04.2025 ந் தேதி நானும் ஹரிகரன் என்பவரும் இரவு நேர பணியில் இருந்தோம் என்றும், அதிகாலை 04.04.2025 அன்று 2.50 மணிக்கு நாங்கள் இருவரும் தூங்கி கொண்டிருந்தோம் என்றும், அப்போது இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்த பெட்ரோல் போடுமாறு என்னை அழைத்தார்கள் என்றும், அவர்கள் 200க்கு பெட்ரோல் போட்டுவிட்டு செல்போன் மூலம் அனுப்புவதாக சொன்னார்கள் என்றும், அரைமணிநேரம் ஆகியும் பணம் அனுப்பாமல் இருந்தார்கள் என்றும், அவர்கள் கையில் பணம் இல்லை என்று சொன்னார்கள் என்றும், அதற்கு நான் உங்கள் செல்போனை கொடுத்து விட்டு போங்கள் பணம் கொடுத்துவிட்டு அதை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னேன் என்றும், அதற்கு எதிரிகள் மூவரும்

செல்போனையா கேட்கிறாய் என சொல்லி தேவிடியா பையா என சொல்லி கையால் கண்ணத்திலும், முதுகிலும் அடித்தார்கள் என்றும், பின்னர் மூவரும் கீழே கிடந்த கல்லை எடுத்து முதுகு, உடம்பில் அடித்தார்கள் என்றும், வலி தாங்க முடியாமல் நான் கத்தவே ஹரிகரன் வந்து சண்டையை மறித்துவிட்டார் என்றும் பின்னர் அவர்கள் கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்ற சங்கதியை போலிசார் விசாரணையிலும் புகாரிலும் சொல்லி விட்டு எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.06.01 02:43:15 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.